# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 35 | 4 Pages | 05.09.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 35 | 4 பக்கங்கள் | 05.09.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## சி.இ.ஓ.னா இப்படி இருக்கனும், ஆனால் பராக் அப்படியில்லை எலான் மஸ்க் தகவல்



அமெரிக்கா, செப். 5

உலகின் முன்னணி இணையவழி சமூக கருத்து பரிமாற்ற வலைதளமாக இருந்து வந்த டுவிட்டரை, உலகின் நம்பர் 1 பணக்காரரும், அமெரிக்க தொழிலதிபருமான எலான் மஸ்க், கடந்த அக்டோபர் 2022ல் சுமார் ரூ. 37 ஆயிரம் ($44 பில்லியன்) கோடிக்கு விலைக்கு வாங்கினார். 2022 மார்ச் மாதம் அதன் அப்போதைய தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்த பராக் அக்ரவால் எனும் இந்தியஅமெரிக்கரை ஒரு இரவு நேர விருந்தில் எலான் மஸ்க் சந்தித்தார். 2022 அக்டோபர் மாதம் மஸ்க் டுவிட்டரை விலைக்கு வாங்கியதும், முதல் வேலையாக பராக் அக்ரவாலை பணிநீக்கம் செய்தார். டுவிட்டர் வலைதளத்தின் லாபத்தை பெருக்கும் நோக்கில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை தற்போது வரை எடுத்து வரும் மஸ்க் அதன் பெயரை எக்ஸ் என மாற்றம் செய்திருக்கிறார். அக்ரவால் பணிநீக்கம் செய்யப்பட்டது தற்போது வரை பேசுபொருளாக உள்ளது. இந்நிலையில், எலான் மஸ்க்கின் வாழ்க்கை சரிதத்தை வால்டர் ஐசக்ஸன் என்பவர் ஒரு புத்தகமாக எழுதி இருக்கிறார். இந்த புத்தகம் வரும் வாரங்களில் வெளியிடுவதற்கான பணிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார். அந்த புத்தகத்தில் பராக் அக்ரவாலை, எலான் மஸ்க் நீக்கியதற்கான காரணங்கள் இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. மஸ்க், பராக் அகர்வால் குறித்து என்ன நினைத்தார் என வால்டர் எழுதியுள்ளார். "அக்ரவால் ஒரு 'நல்ல மனிதர்.' ஆனால், ஒரு தலைமை நிர்வாக அதிகாரியாக இருப்பதற்கு 'நல்ல மனிதர்' எனும் குணம் மட்டும் போதாது. மக்களால் ஒரு தலைமை நிர்வாக அதிகாரி விரும்பப்பட வேண்டும் எனும் அவசியமில்லை. நெருப்பை உமிழும் டிராகனை போல் உள்ள ஒரு தலைமை தான் டுவிட்டருக்கு தேவை. அந்த குணம் பராக் அக்ரவாலிடம் இல்லை," இவ்வாறு மஸ்க் கருதியதாக வால்டர் ஐசக்ஸன், மஸ்கின் சுயசரிதையில் எழுதியுள்ளார். கடந்த அக்டோபரில் பராக்கை பணிநீக்கம் செய்த மஸ்க், இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை தானே அந்த பொறுப்பை வகித்து வந்தார். 2023ஜூன்மாதம், விளம்பரதுறையில் வல்லவரானலிண்டாயாக்கரினோ எனும் பெண்மணியை நியமித்த பிறகு மஸ்க் அந்த பொறுப்பில் இருந்து விலகி கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷியாவுக்கு எதிரான போர்: உக்ரைன் பாதுகாப்பு மந்திரியை நீக்கிய அதிபர் ஜெலன்ஸ்கி



உக்ரைன், செப். 5

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்தது. அதை தொடர்ந்து நடைபெற்ற போரில் இரு தரப்பிலும் உயிர் சேதங்கள் ஏற்பட்டன. இது உலக நாடுகளிடையே கவலையை ஏற்படுத்தியது. இந்நிலையில் உக்ரைன் நாட்டின் பாதுகாப்பு மந்திரி ஒலெக்ஸி ரெஸ்னிகோவை அந்த நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி பதவி நீக்கம் செய்துள்ளார். அவருக்கு பதிலாக ருஸ்டெம் உமெரோவை நியமிக்குமாறு அவர் அறிவித்து உள்ளார். நாட்டு மக்களுக்கான காணொளி செய்தியில் இது தொடர்பாக குறிப்பிட்டுள்ள அதிபர் ஜெலென்ஸ்கி, பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவுக்குப் பதிலாக ருஸ்டெம் உமெ ரோவை நியமிக்க இந்த வாரம் நாடாளுமன்றத்தை நாட இருப்பதாக தெரிவித்துள்ளார். கடந்த 550 நாட்களுக்கும் மேலாக ரஷ்யாவுக்கு எதிரான போரை முழுமையாக முன்னெடுத்தவர் ரெஸ்னிகோவ் என ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். அவருக்கு பதிலாக ருஸ்டெம் உமெரோவை நியமிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெற இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2021ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்தே உக்ரைன் பாதுகாப்புமந்திரியாகரெஸ்னிகோவ்செயல்பட்டுவருகிறார். ரஷியாவுக்கு எதிரான போரின்போது மேற்கத்திய ராணுவ உதவியைப் பெற ரெஸ்னிகோவ் நடவடிக்கை மேற்கொண்டார். ரஷ்யா உக்ரைன் மீது தனது முழுஅளவிலானபடையெடுப்பைத்தொடங்கியதில்இருந்துஉக்ரைனின் பாதுகாப்பு அமைச்சகம் மேற்கொள்ளும் முக்கியமான நடவடிக்கை இது எனகூறப்படுகிறது. ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு உள்ளது. போர் காலத்தில் ஊழல் முறை கேடுகளுக்கு இடமில்லை என அதிபர் ஜெலென்ஸ்கி நம்பிக்கை தெரிவித்த நிலையில், ரெஸ்னிகோவ் நீக்கப்படும் முடிவு அந்த நாட்டு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கனடாவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் துப்பாக்கி சூடு: 2 பேர் பலி

கனடா, செப். 5

துப்பாக்கி சூடு குறித்து தகவல் அறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்துக்குவிரைந்துசென்றுகாயம்அடைந்தவர்களைமீட்டுசிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். துப்பாக்கி சூட்டுக்கான காரணம் என்ன? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


கனடாவின் தலைநகர் ஒட்டாவா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள இன்பினிட்டி கன்வென்ஷன் சென்டரில் ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடை பெற்றது. அப்போது ஒரு கும்பல் அங்கு புகுந்து துப்பாக்கியால் சுட்டது. இதனால் அங்கு இருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இந்த சம்பவத்தில் துப்பாக்கி குண்டு பாய்ந்ததில் டொரண்டோவைசேர்ந்தசையத்மொஹமதுஅலி(வயது26), அப்திஷாகுர் அப்திதாஹிர்(36) ஆகிய 2 பேர்பலியானார்கள். 6 பேர்காயம்அடைந்தனர். இதுபற்றி தகவல் அறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றுகாயம்அடைந்தவர்களைமீட்டுசிகிச்சைக்காகமருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். துப்பாக்கி சூட்டுக்கான காரணம் என்ன? இனப்பிரச்சனையில் இந்த சம்பவம் நடைபெற்றதா? என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது. தொடர்ந்து அந்த பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# 6 மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் வறட்சி நிவாரணம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, செப். 4

மழை பெய்த காரணத்தினால் புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தென்காசி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிதமான வறட்சி ஏற்பட்டது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 62 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் குறைவாக மழை பெய்த காரணத்தினால் புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தென்காசி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிதமான வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக 3 லட்சத்து 52 ஆயிரத்து 797 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட வேளாண் பயிர்கள் 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டது. இதில் 1,87,275 விவசாயிகளுக்கு ரூ.181.40 கோடி நிவாரணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (திங்கட்கிழமை) 3 விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான ஆணைகளை வழங்கினார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 62 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்து, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு ரூ.35 கோடி மதிப்பிலான 3,907 பவர்டில்லர்கள் மற்றும் 293 விசை களையெடுப்பான் கருவிகள் வழங்கிடும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு பவர்டில்லர்கள் மற்றும் விசை களையெடுப்பான்கருவிகளுக்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.



## பல்லடத்தில் ஆபத்தான மின்கம்பம் அகற்றம்

பல்லடம் , செப். 5

தினமும் சுமார் 3 ஆயிரம் பேர் அந்த வழியாக சென்று வருகின்றனர். மின் கம்பம் சாயாமல் இருக்க அதன்அருகேதாங்கிப் பிடிக்கும் கம்பம் அமைக்கப்பட்டது.

பல்லடம் காந்தி ரோட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது. இதன்நுழைவாயில் எதிரே அமைக்கப்பட்டுள்ள மின் கம்பம் ஒன்று, தாங்கிப் பிடிக்கும் கம்பம் மற்றும் கம்பிகளில்லாமல், எந்த நேரமும் விழும் அபாய நிலையில் இருந்தது. அரசு கல்லூரி மற்றும் அதன் அருகிலேயே பெண்கள், ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இரண்டும் அமைந்துள்ளன.

இதனால் தினமும் சுமார் 3 ஆயிரம் பேர் அந்த வழியாக சென்று வருகின்றனர். எனவே மின் கம்பம் சாய்ந்து விடும் முன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதுகுறித்து மாலைமலர் நாளிதழில் படத்துடன் செய்தி வெளியானது.

இதனைப் பார்த்த மின்வாரிய அதிகாரிகள் நேற்று அந்த அபாயம் மின் கம்பத்தை மாற்றி அமைத்தனர். மேலும் மின் கம்பம் சாயாமல் இருக்க அதன் அருகே தாங்கிப் பிடிக்கும் கம்பம் அமைக்கப்பட்டது. அபாயம் மின்கம்பத்தை மாற்ற பொது மக்களின் கோரிக்கைக்கு நடவடிக்கை எடுத்த மின்வாரிய அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.



## சாலையில் கொட்டப்படும் கழிவுகளால் விபத்து அபாயம்



ஊத்துக்குளி, செப். 5

நால் ரோடு செல்லும் சாலையின் வளைவு பகுதியில் குப்பை கழிவுகள் கொட்டப்படுகிறது. குப்பை கழிவுகளால் சுகாதார சீர்கேடு ஏற்படும்.

ஊத்துக்குளி ஆர்.எஸ். சாலையில் இருந்து கவுண்டம்பாளையம் நால் ரோடு செல்லும்சாலையின்வளைவு பகுதியில் குப்பை கழிவுகள் கொட்டப்படுகிறது. இது சாலையின் நடுப் பகுதியில் வந்து சேருகிறது. இதனால் விபத்துகள் மற்றும் சுகாதார சீர்கேடு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவில் அர்ச்சகர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை

பல்லடம், செப். 5

புதிதாக பணியில் இணைந்தவர்களில் 40 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகம் உள்ளனர் அர்ச்சகர்கள், பூசாரிகள் உள்ளிட்டோர் மிகவும் குறைந்த சம்பளத்தில் தான் வேலை பார்க்கின்றனர்.

தமிழ்நாட்டில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்கள் உள்ளது. இந்த கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகள், உள்ளிட்டோர் அவர்களது குழந்தைகளின் கல்விச்செலவுக்காக சிரமப்படுகின்றனர். இதனடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒரு கால பூஜை திட்ட கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பூசாரிகளின் வாரிசுகளுக்கு உயர்கல்விக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இது குறித்து கோவில் பூசாரிகள் சங்க மாநிலத் தலைவர் வாசு கூறியதாவது: ஒரு கால பூஜை நடைபெறும் கோவில்களில் வேலை பார்க்கும் அர்ச்சகர்கள், பூசாரிகள் உள்ளிட்டோர் மிகவும் குறைந்த சம்பளத்தில் தான் வேலை பார்க்கின்றனர். தமிழ்நாடு அரசின் இந்த திட்டம் உண்மையில் அவர்களுக்கு பயன் அளிப்பதாகவே கருதுகிறோம். இருந்தாலும் 60 வயதுக்கு மேற்பட்ட பூசாரிகள் பலர் சமீபத்தில் தான் ஓய்வு பெற்றனர். தற்போது புதிதாக பணியில் இணைந்தவர்களில் 40 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகம் உள்ளனர்.

இவர்களின் வாரிசுகள் உயர்கல்வி படிக்கும் வயது அடைந்து இருப்பார்களா என்பது சந்தேகமே ? இந்த திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தினால் எண்ணற்ற அர்ச்சகர்கள், பூசாரிகள் நிச்சயம் பயனடைவார்கள்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வெள்ளகோவிலில் 60 டன் முருங்கை காய் வரத்து

வெள்ளகோவில், செப். 5

ஞாயிறுதோறும் முருங்கைக்காய் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது 105 விவசாயிகள் 60 டன் முருங்கைகாய் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்

வெள்ளகோவிலில் வாரச்சந்தையையொட்டி ஞாயிறுதோறும் முருங்கைக்காய் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த முருங்கைக்காய் கொள்முதல் நிலையத்திற்கு வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் முருங்கைக்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து செல்வார்கள். அந்த வகையில் நேற்று 105 விவசாயிகள் 60 டன் முருங்கைகாய் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முத்தூர், வெள்ளகோவில், காங்கேயம், மூலனூர் பகுதிகளைச்சேர்ந்தவியாபாரிகள் கலந்துகொண்டு ஒரு கிலோ செடி முருங்கை ரூ. 6 க்கும், மரம் முருங்கை ரூ.5 க்கும், கரும்பு முருங்கை ரூ. 8 முதல் ரூ.10



வரைக்கும் கொள்முதல் செய்தனர். கொள்முதல் செய்த முருங்கைக் காய்களை வியாபாரிகள் சென்னை, மதுரை, கோவை, ஒட்டன்சத்திரம், பெங்களூர், மைசூர், சட்டீஸ்கர், மும்பை, நாக்பூர், பூனே, கொல்கத்தா, ஜெய்பூர் ஆகிய பகுதியில் உள்ள ஓட்டல் மற்றும் மார்கெட்டுகளுக்கு அனுப்பி வைத்தனர். இத் தகவலை முருங்கைக்காய் வியாபாரி கே.ஆர்.கே.நாச்சிமுத்து கூறினார்.

# சட்டவிரோதமாக மது விற்ற 250 பேர் மீது வழக்கு

கரூர், செப். 5

கரூர் மாவட்டத்தில் கடந்த ஆகஸ்டு மாதம் 1ந்தேதி முதல் 31ந்தேதி வரை கரூர் டவுன், பசுபதி பாளையம், வெங்கமேடு, வாங்கல், வேலாயுதம்பாளையம், தாந்தோணி மலை, க.பரமத்தி, அரவக்குறிச்சி, தென்னிலை, குளித்தலை, மாயனூர், தோகைமலை பாலவிடுதி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள போலீஸ் நிலையத்திற்குட்பட்ட போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இதில் சட்டவிரோதமாக மதுவை பதுக்கி விற்றதாக 250 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேலும் அவர்களிடமிருந்து மொத்தம் 2,325 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட தகவலை கரூர் மாவட்ட போலீசார் தெரிவித்தனர். வேலாயுதம்பாளையம் போலீசார் மரவாபாளையம் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு உள்ள டாஸ்மாக் பகுதியில் மது விற்றதாக திருச்சி மாவட்டம் தொட்டியம் பகுதியை சேர்ந்த ரவி என்பவர் மீது போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் தோகைமலை அருகே உள்ள தெற்குபள்ளம் பகுதியில் உள்ள டாஸ்மாக் பார் அருகே புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் பகுதியை சேர்ந்த ஜெயபாரதி (வயது 31) என்பவர் மது விற்றுக்கொண்டிருந்தார். இதையடுத்து அவரை தோகைமலை போலீசார் கைது செய்தனர். தரகம்பட்டி அருகேதேவர்மலை ஊராட்சி மம்பத்தையூரை சேர்ந்த ரவி (48) என்பவர் தனது பெட்டிக்கடையில் பதுக்கி வைத்து மது விற்றுகொண்டிருந்தார். இதையடுத்து அவரை சிந்தாமணிப்பட்டி போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அவர் விற்பனைக்காக வைத்திருந்த மதுபாட்டில்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

# அவினாசி அருகே கன்னிமார் சுவாமிகள் கும்பாபிஷேக விழா



அவினாசி, செப். 5

திருப்பூர் மாவட்டம் அவினாசி வட்டம் பழங்கரை ஊராட்சி நல்லி கவுண்டம்பாளையத்தில் கன்னிமார் சுவாமிகள் கருப்பராயன் திருக்கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இக்கோவில் கடந்த ஆறு மாதங்களாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. இதையடுத்து நேற்று இக்கோவில் கும்பாபிஷேகம் நடந்தது. முன்னதாக கடந்த1ந்தேதிதிருவிளக்கு வழிபாடு, புனித நீர் வழிபாடு, மூத்த பிள்ளையார் வேள்வி ஆகியவை நடந்தன. அன்று காலை 10 மணியளவில் பழங்கரை பொன் சோழீஸ்வரர் கோவிலில் இருந்து 200க்கும் மேற்பட்ட பெண்கள்தீர்த்த குடம் மற்றும் முளைப்பாரி எடுத்துச் சென்று சுவாமி வழிபாடு செய்தனர். 2ந்தேதி காலை 8 மணி அளவில் விமான கலசம் நிறுவுதல் நிகழ்ச்சி நடந்தது.

மாலை 3 மணி முதல் 4 மணி வரை நிலத்தேர் வழிபாடு, என் திசை காவலர் வழிபாடு, காப்பு அணிதல், ஆகியவை நடந்தன. மாலை 6 மணிக்கு முதல் கால வேள்வி, பேரொளி வழிபாடு, திருமுறை விண்ணப்பம், அருளாளர் அமுதம் வழங்குதல் நிகழ்ச்சி நடந்தது.

3ந் தேதி காலை 5 மணிக்கு இரண்டாம் கால வேள்வி, 6 .45 மணிக்கு வேள்வி நிறைவு, பேரொளி வழிபாடு திருமுறை விண்ணப்பம் நடந்தன.

காலை 7 மணி அளவில் திருக்குடங்கள் திருக்கோவிலில் வளம் வந்தது.

இதை அடுத்து 8 மணியளவில் வினாயகர் விமானம் மற்றும் மூல மூர்த்திகளாகிய, கருப்பண்ணசாமி, கன்னிமார் சாமிகளுக்கு புனித நீரூற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் அவினாசி, நல்லி கவுண்டம்பாளையம், பழங்கரை, திருப்பூர், மேட்டுப்பாளையம், சந்தியங்கலம், மைசூரு, உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் காலை முதல் மாலை வரை அன்னதானம் வழங்கப்பட்டது.

# உடுமலை அருகே தி.மு.க. சார்பில் ரேக்ளா போட்டி



உடுமலை, செப். 5

போட்டி 200 மற்றும் 300 மீட்டர் என இரு பிரிவுகளில் நடைபெற்றது. முதல் பரிசாக ஒரு பவுன் தங்க நாணயம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் முதல் அமைச்சர் மு.கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு உடுமலை அடுத்த கொடுங்கியம் ஊராட்சி பகுதியில் உடுக்கம்பாளையம் மற்றும்எரிசனம்பட்டிதிமுக., கிளை சார்பில் 8 ம் ஆண்டு ரேக்ளா போட்டி நடத்தப்பட்டது. போட்டிக்கு உடுமலை மேற்கு ஒன்றிய செயலாளர் தி.செழியன் தலைமை வகித்தார். போட்டியை திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக., அவைத் தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ இரா. ஜெயராமகிருஷ்ணன் கொடிஅசைத்துதொடங்கி வைத்தார். இதில் பங்கேற்பதற்காக காங்கேயம்,பொள்ளாச்சி, தாராபுரம், ஒட்டன்சத்திரம்,கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாட்டு வண்டிகள் கொடிங்கியம் பகுதிக்கு சரக்கு வாகனத்தில் வருகை தந்தது.போட்டி 200 மற்றும் 300 மீட்டர் என இரு பிரிவுகளில் நடைபெற்றது.இதில் 200 மீட்டர் பிரிவில் 343 வண்டிகளும் 300 மீட்டர் பிரிவில் 99 வண்டிகளும் கலந்து கொண்டது. அதற்கு முன்பாக போட்டியில் கலந்து கொள்ள வருகை தந்த உரிமையாளர்கள் நுழைவுக் கட்டணத்தை செலுத்தி டோக்கன்பெற்றுக்கொண்டனர். அதைத் தொடர்ந்து ஒலி பெருக்கி மூலமாக ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படி மாட்டு வண்டிகள் அழைக்கப்பட்டது. இதையடுத்து வண்டிகளில் பூட்டப்பட்ட மாடுகள் இலக்கை நோக்கி சீறி பாய்ந்து சென்றது.போட்டியை பொதுமக்கள் பாதுகாப்பாக பார்த்து ரசிக்கும் வகையில் உடுமலைஆனைமலை சாலையின் இரண்டு புறங்களில் இரும்பு தடுப்புகள் வைத்து கட்டப்பட்டு இருந்தது. அங்கு திரண்ட சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் விசில் அடித்தும் கைதட்டியும் மாட்டு வண்டி உரிமையாளர்களை உற்சாகப் படுத்தினார்கள். அதன்படி 200 மீட்டரில் முதல் பரிசாக ஒரு பவுன் தங்க நாணயமும், 2ம் பரிசாக ¾ பவுன் தங்க நாணயமும் 3ம் பரிசாக ½ பவுன் தங்க நாணயமும், நான்காம் பரிசாக ¼ பவுன் தங்க நாணயமும் வழங்கப்பட்டது. மேலும் ஆறுதல் பரிசாக 5ம் பரிசு முதல் 10 ம் பரிசு வரை ஒரு கிராம் தங்க நாணயமும் 11 ம் பரிசு முதல் 30ம் பரிசு வரை கோப்பைகளும், ஆறுதல் பரிசாக கோப்பைகள் வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட்டது.

இதேபோன்று 300 மீட்டருக்கும் பரிசு மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது. 18 வினாடிகளுக்கும் குறைவாக வந்த மாட்டு வண்டிகளின் உரிமையாளர்களுக்கு முன்னாள் எம்.எல்.ஏ ஜெயராமகிருஷ்ணன் வெள்ளி நாணயம் பரிசாக வழங்கினார். இதில் உடுமலை ஒன்றிய செயலாளர்கள் செந்தில்குமார், எஸ்.கே.எம் தங்கராஜ் என்ற மெய்ஞான மூர்த்தி, மடத்துக்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சாகுல் ஹமீது, மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ராம்குமார், கிருஷ்ணவேணி,ஊராட்சி மன்ற தலைவர்கள் கலாமணி மோகன்,கிருஷ்ணவேணி சரவணப் பெருமாள்,பாரதி கோவிந்தராஜ்,அபர்ணா ராம்குமார்,பாலதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். போட்டி நடைபெறுவதையொட்டி உடுமலை ஆனைமலை சாலையில் வாகனங்கள் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது.மேலும் தளி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

# பல்லடம் பஸ் நிலையத்தில் பழுதடைந்த தாய்மார்கள் பாலூட்டும் அறையை சீரமைக்க கோரிக்கை



பல்லடம், செப். 5

தினமும் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள்பஸ்நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். பாலூட்டும் அறையின் பக்கவாட்டு பகுதியில் சேதமடைந்து பெரிய அளவில் ஓட்டை ஏற்பட்டுள்ளது.

பல்லடம் பஸ் நிலையத்தில் கோவை, திருச்சி, உடுமலை, பொள்ளாச்சி, மதுரை,போன்ற ஊர்களுக்கு செல்ல தினமும் சுமார் 500க்கும் மேற்பட்ட பஸ்கள் வந்து செல்லும். தினமும் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வேலை, கல்வி, உள்ளிட்ட பணிகளுக்காக பஸ் நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். இந்த நிலையில் பல்லடம் பஸ் நிலையத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தாய்மார்கள் பாலூட்டும் அறை அமைக்கப்பட்டது. இதனால் பாலூட்டும் தாய்மார்கள் பயனடைந்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன் தாய்மார்கள் பாலூட்டும் அறையின் பக்கவாட்டு பகுதியில் சேதமடைந்து பெரிய அளவில் ஓட்டை ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்த அறையில் சென்று பாலூட்டுவதற்கு தாய்மார்கள் தயங்கி வருகின்றனர். எனவே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தாய்மார்கள் பாலூட்டும் அறையை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாமக்கல் நகராட்சி பகுதியில் கொசுப்புழு ஒழிப்பு பணி மும்முரம்



நாமக்கல், செப். 5

நாமக்கல் நகராட்சியில் 39 வார்டுகள் உள்ளன. இப்பகுதிகளில் மழைக் கால நோய் பரவாமல் தடுக்கும் வகையில் தொடர்ச்சியாக வார்டு வாரியாக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் மழைக்கால நோய் பரவாமல் தடுக்கும் வகையில் வீதி, வீதியாக கொசு மருந்து அடிக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

நாமக்கல் நகராட்சியில் 39 வார்டுகள் உள்ளன. இப்பகுதிகளில் மழைக் கால நோய் பரவாமல் தடுக்கும் வகையில் தொடர்ச்சியாக வார்டு வாரியாக சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் நகரை பொறுத்த வரை கடந்த வாரத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் நகரின் பல்வேறு இடங்கங்களில் மழைநீர் தேங்கியது. கொசுப்புழு ஒழித்தல் இதையடுத்து நாமக்கல் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் மழைக்கால நோய் பரவாமல் தடுக்கும் வகையில் வீதி, வீதியாக கொசு மருந்து அடிக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. மேலும் வீடு, வீடாக சென்று கொசு மருந்து அடித்தல், கொசுப்புழு ஒழித்தல் உள்ளிட்ட பணிகளில் நகராட்சி பணியாளர்கள்தீவிரமாகஈடுபட்டு வருகிறார்கள். இந்த பணி வாரம் தோறும் வார்டு வாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினமும் 45 பணியாளர்கள் நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகம் ஏற்பட்ட 12 இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் உத்தரவின்படி நகராட்சி பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் தண்ணீரில் கொசுப்புழு உற்பத்தியாகாமல் பார்த்து கொள்ளும்படி அறிவுறுத்தி வருகிறார்கள். மேலும், வீடுகளின் முன்புறம் உள்ள தொட்டிகளில் தேங்கியுள்ள தண்ணீரை அகற்றும்படி அறிவுறுத்தி வருகிறார்கள்.

டெங்கு இதுகுறித்து நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திருமூர்த்தி கூறுகையில் மழைக் காலங்களில் கொசுவால் ஏற்படும் நோய்களை தடுக்க நகராட்சி பகுதியில் தொடர்ச்சியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் டெங்கு பரவுகிறது.

இதுதொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி கொசு உற்பத்தியை தடுக்க மருந்து தெளிக்கப்படுகிறது. பொதுமக்கள் தங்கள் குடியிருப்பு பகுதியில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் டெங்கு பரவலை தடுக்க முடியும் என்றார்.

# பா.ஜ.க. பிரமுகர் உள்பட 4 பேர் படுகொலை: பல்லடத்தில் தொடர்ந்து பதற்றம் கொலையாளி ஒருவர் கைது






பல்லடம், செப். 5

கொலை செய்யப்பட்ட செந்தில்குமார் பருத்திக் கொட்டை வியாபாரம் செய்து வந்தார். கொலை செய்யப்பட்ட 4 பேரின் உடல்களும் பல்லடம் அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட உள்ளது.

திருப்பூர்மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கள்ளக்கிணறு குறை தோட்டம் பகுதியை சேர்ந்தவர் செந்தில்குமார்(வயது47). பருத்திக்கொட்டை வியாபாரம் செய்து வந்தார். இவரது சித்தப்பா பழனிசாமியின் மகன் மோகன்ராஜ் (45). இவர் மாதப்பூர் பஞ்சாயத்து பா.ஜ.க., கிளை தலைவராக உள்ளார். நேற்றிரவு அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் அங்கு வந்த கும்பல் திடீரென வீட்டிற்குள் புகுந்து செந்தில்குமார், மோகன்ராஜ் , அவரது தாயார் புஷ்பவதி (67), புஷ்பவதியின்சகோதரி ரத்தினம்மாள்(58) ஆகியோரை வெட்டியது. இதில் 4 பேரும் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர். கொலை செய்யப்பட்ட செந்தில்குமார் பருத்திக்கொட்டை வியாபாரம் செய்து வந்தார். இதனால் சரக்கு வேன் ஒன்றை வைத்திருந்தார். அந்த சரக்கு வேனுக்கு டிரைவராக நெல்லையை சேர்ந்த குட்டி என்ற வெங்கடேசன் பணியாற்றி வந்துள்ளார். இந்தநிலையில் செந்தில் குமாருக்கும், வெங்கடேசனுக்கு பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் வெங்கடேசனை வேலையை விட்டு செந்தில் குமார் நிறுத்தினார். இந்த பிரச்சினை காரணமாகவும், வழிப்பாதையில் அமர்ந்து மது அருந்தியது தொடர்பான பிரச்சினையிலும் 4 பேர் கொலை நடந்தது தெரியவந்தது. இந்த வழக்கில் டிரைவர் வெங்கடேசனின் கூட்டாளி திருச்சி மாவட்டம் மணப்பாறையை சேர்ந்தசின்னசாமி மகன் செல்லமுத்து (24) என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் கொலையாளிகளை பிடிக்க பல்லடம் டி.எஸ்.பி., சவுமியாதலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட 4 பேரின்உடல்களும்இன்று காலை பல்லடம் அரசு ஆஸ்பத்திரியில்பிரேதபரிசோதனை செய்யப்பட உள்ளது. கொலையான மோகன்ராஜ் பா.ஜ.க. நிர்வாகி என்பதால் பா.ஜ.க., நிர்வாகிகள், தொண்டர்களும் ஆஸ்பத்திரி முன்பு குவிந்துள்ளனர். இதனால் பல்லடத்தில் தொடர்ந்து பதட்டம் நிலவுகிறது. அசம்பாவித சம்பவங்கள் நிகழாதவாறு இருக்க திருப்பூர், கோவை, ஈரோடு, நாமக்கல் ஆகிய 4மாவட்டங்களில்இருந்து 700க்கும் மேற்பட்ட போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த கொலை சம்பவத்துக்கு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். ஆனந்தன் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் இன்று காலை கொலை செய்யப்பட்ட செந்தில்குமார், மோகன்ராஜ், புஷ்பவதி, ரத்தினம்மாள் ஆகியோரின் வீடுகளுக்கு தமிழக செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்து ராஜ் ஆகியோர் நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். பின்னர் பல்லடம் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்ற அவர்கள், 4 பேர் உடல் பிரேத பரிசோதனைக்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தனர். மேலும் கொலை நிகழ்ந்த பகுதியையும் பார்வையிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து போலீஸ் உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினர்.

# 2வது சீசனுக்கு தயாராகும் நீலகிரி சுற்றுலா பயணிகள் வரத்து அதிகரிப்பு




நீலகிரி, செப். 5

குன்னூர் டால்பின்ஹவுஸ்சாலையில் போக்குவரத்து நெரிசல் கேத்தரின் நீர்வீழ்ச்சி, அரிய வகை வனவிலங்குகளை கண்குளிர கண்டு ரசித்து வருகின்றனர்

நீலகிரி மாவட்டத்தில் 2வது சீசன் ஆரம்பமாக உள்ளது. இதனால் ஊட்டி மற்றும் குன்னூருக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

இதனால் குன்னூரில் இருந்து டால்பின் ஹவுஸ் செல்லும் சாலையில் தற்போது அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர் ஊட்டியில் தற்போது குவிந்து வருகின்றனர். அங்கு அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பூங்காக்கள் மற்றும் சுற்றுலா தலங்களில் மகிழ்ச்சியாக பொழுது போக்கி வருகின்றனர்.

குறிப்பாக குன்னூர் சிம்ஸ்பூங்கா, காட்டேரி பூங்கா, டால்பின் நோஸ் உள்ளிட்ட சுற்றுலாத்தலங்களில் பயணிகள் வருகை அதிகரித்து உள்ளது. அங்கு அவர்கள் பூத்துக்குலுங்கும் மலர்களை கண்டு ரசித்து வருகின்றனர். டால்பின் நோஸ் பகுதியில் வெள்ளியை உருக்கி ஊற்றியது போல் காட்சியளிக்கும் கேத்தரின் நீர்வீழ்ச்சி, பழங்குடியினர் குடியிருப்பு, அரிய வகை வனவிலங்குகள் ஆகியவற்றை கண்குளிர கண்டு ரசித்து வருகின்றனர்.

குன்னூர், ஊட்டி ஆகிய பகுதிகளில் ஹோம் மேட் சாக்லேட்டுகள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் அங்கு கடை நடத்தி வரும் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

# உயர்கல்வியில் தொழில்முனைவோர் திறன் பயிற்சி கருத்தரங்கம்



மானாமதுரை, செப். 5

இளையான்குடியில் உயர்கல்வியில் தொழில் முனைவோர் திறன் பயிற்சி கருத்தரங்கம் நடந்தது. பேராசிரியர் சந்திரமோகன் சிறப்புரையாற்றினார்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள டாக்டர் சாகிர் உசேன் கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை மற்றும் கல்லூரி உள் தர மேம்பாட்டு செல் இணைந்து "உயர்கல்வியில் தொழில்முனைவு மேம்பாட்டு திறன்" என்னும் தலைப்பில் பயிற்சி கருத்தரங்கம் நடைபெற்றது.

வணிகவியல் துறைத்தலைவர் நைனா முகம்மது வரவேற்றார். கல்லூரி முதல்வர் ஜபருல்லாஹ் கான் தலைமை உரையாற்றினார். உதவிப்பேராசிரியர் சமுசுதீன் இப்ராஹிம் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினராக திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம், வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மை துறை தலைவர் பேராசிரியர் சந்திரமோகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரி உள் தர மேம்பாட்டு செல் ஒருங்கிணைப்பாளர் நசீர்கான், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் அப்துல் முத்தலீப் உள்ளிட்ட துறைசார் பேராசிரியர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

முடிவில் உதவிப்பேராசிரியர் ஜாஹிர் உசேன் நன்றி கூறினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

# உதயநிதி கருத்துக்கு எதிர்ப்பு வலுக்கிறது: டெல்லியில் உள்ள தமிழக அரசு இல்ல ஆணையரிடம் பா.ஜ.க. குழு கடிதம்



சென்னை, செப். 5

சனாதனம் என்பதை எதிர்ப்பதை விட ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் ஆகும் என்று கூறி இருந்தார். இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எதிர்க்காமல் மேடையில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சனாதனம் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய பேச்சு இந்திய அளவில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அவர் பேசும் போது, கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்க கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதை விட ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் ஆகும் என்று கூறி இருந்தார். அமைச்சர் உதயநிதியின் இந்த கருத்துக்கு கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா பேசுகையில், தமிழக முதலமைச்சரின் மகன் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க. தலைவர்கள் சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இவர்கள் வாக்கு வங்கி அரசியலுக்காக, சனாதன தர்மம் குறித்து பேசுகின்றனர். சனாதன தர்மத்தை அவமதிக்கின்றனர் என்று கடுமையாக பேசி உள்ளார். மத்திய பிரதேச பொதுக் கூட்டத்தில் பா.ஜனதா தேசிய தலைவர் ஜே.பி. நட்டா பேசுகையில், வருகிற தேர்தலில் இந்துக்களுக்கான எதிரான வியூகத்தை இந்தியா கூட்டணி பயன்படுத்தப் போகிறதா? என்று கேள்வி எழுப்பி உள்ளார். தி.மு.க.வினர் வெறுப்பு அரசியலை பரப்பி வருவதாகவும் குற்றம் சாட்டி உள்ளார். பா.ஜனதாவின் செய்தி தொடர்பாளர் சேஷாக்பூரி வாலா கூறுகையில், உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்தை நோயுடன் ஒப்பிட்டு பேசி உள்ளார். சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்பது இந்தியாவில் சனாதனததை பின்பற்றும் 80 சதவீத மக்களை இனப்படுகொலை செய்ய அழைப்பு விடுப்பது போன்றது ஆகும் என்று கண்டனம் தெரிவித்து உள்ளார்.

மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் கூறுகையில், உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்தின் மூலம் தி.மு.க.வினரின் உண்மையான முகம் வெளிப்பட்டு விட்டது என்று தெரிவித்து உள்ளார். சனாதன தர்மம் என்பது நிரந்தரமானது. இது போன்ற அரசியல் கருத்துகளால் எதுவும் மாறி விடாது என்றும் கூறி உள்ளார். மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சத்திய பிரமாணம் எடுத்துள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 'கொசுக்களைப் போல' சனாதன தர்மத்தை ஒழிக்க அழைப்பு விடுக்கிறார். இதை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு எதிர்க்காமல் மேடையில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கூட்டணியின் நோக்கமே சனாதன தர்மத்தை ஒழிப்பது என்கிறார்.

இந்துக்களுக்கு எதிரானது இந்தியா கூட்டணி என்று கூறி உள்ளார். இப்படி பல்வேறு பா.ஜனதா தலைவர்கள் கருத்து பதிவிட்டு வருகின்றனர். இதற்கிடையே டெல்லி பா.ஜனதாதலைவர்வீரேந்திர சச்தேவா தலைமையிலான குழுவினர் டெல்லியில் உள்ள தமிழ்நாடு அரசு இல்ல முதன்மை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜியிடம் ஒருகடிதத்தை கொடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கும் படி கூறினர். அந்த கடிதத்தில் சனாதனம் குறித்த அமைச்சர் உதயநிதியின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து இருந்தனர்.

# விநாயகர் கோவிலில் கும்பாபிஷேகம்



அரியலூர், செப். 5

அரியலூர் வாலாஜா நகரம் ஊராட்சியில் உள்ள மின் நகரில் சித்தி விநாயகர், மாரியம்மன், சுப்பிரமணியர், அய்யனார் கோவில் உள்ளது. இந்த கோவிலில் 12 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதையொட்டி காலை 10.30 மணிக்கு யாத்ரா தானம் புறப்பட்டு மூலவர்விமானத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மகா தீபாராதனைக்கு பின் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# கோவையில் சட்டமன்ற பொது நிறுவனங்கள் குழுவினர் நேரில் ஆய்வு



கோவை, செப். 5

தமிழக சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சவுந்தரபாண்டியன் தலைமை யில் கோவையில் இன்று ஆய்வு மேற்கொண்டனர். முதலாவதாக பீளமேட்டில் உள்ள தொழில்நுட்ப பூங்காவை பார்வையிட்டனர். பின்னர் சுங்கத்தில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனையை பார்வையிட்டனர். பணிமனையில் நடைபெறும் பணிகளை ஊழியர்களிடம் கேட்டறிந்தனர். அவர்களின் குறைகளையும் கேட்டனர். தொடர்ந்து வாலாங்குளம் படகு இல்லம், உக்கடம் குறிச்சி குளம் சீரமைப்பு பணி, புட்டுவிக்கியில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட துணை மின் நிலையம், பச்சாபாளையம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது குழு உறுப்பினர்கள் அப்துல் சமது, உடுமலை ராதாகிருஷ்ணன், மு.பெ.கிரி, கோவிந்தசாமி, பிரகாஷ், மாவட்ட கலெக்டர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி மேயர் கல்பனா, துணை மேயர் வெற்றிச்செல்வன், மாநகராட்சி கமிஷனர் பிரதாப் ஆகியோர் உடன் சென்றனர்.

# கூட்டணி குறித்து உரிய நேரத்தில் அறிவிப்போம் அன்புமணி ராமதாஸ்



ஈரோடு, செப். 5

ஈரோட்டில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ்இன்றுநிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது: உலக அளவில் பேட்மிண்டன்போட்டியில்இந்தியா பல பரிசுகளை பெற்று வருகின்றனர். தமிழகத்தை சேர்ந்தவர்கள் உலக அளவில் பதக்கங்களை வாங்க வேண்டும் என்பது எங்களது நோக்கம். குறிப்பாக கிராமபுற மாணவமாணவிகள்அதிகமாக பங்கேற்க தொடங்கி உள்ளனர். தமிழக அரசு இன்னும் ஊக்குவிக்க வேண்டும். நீண்ட காலமாக அத்திக்கடவுஅவிநாசி திட்டம் முடிக்கப்படாமல் இருந்து வருகிறது. கடந்த ஒரு வருடமாக 90 சதவீதம் முடிவடைந்தும் இன்னும் மக்கள் பபண்பாட்டிற்கு வராமல் உள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் குறைவான மழை கிடைத்து உள்ளது. உடனடியாக அத்திகடவு அவிநாசி திட்டம் நிறைவேற்ற வேண்டும். பாண்டியாறு புண்ணம்பழா திட்டம், காவிரி குண்டாறு திட்டம் ஆகிய திட்டங்களை கொண்டு வர வேண்டும். விசைத்தறி கூடங்கள் அதிக அளவில் மூடப்பட்டு உள்ளன. விசைத்தறிகள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. பின்னலாடை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. மேகதாதுவில் அணை கட்டுவது கண்டனத்திற்குரியது. உச்சநீதிமன்றம் கூறியும் அதனை ஏற்க மறுக்கிறது கர்நாடகா. கர்நாடகாவில் உள்ள 4 அணைகளையும் காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு கீழ் கொண்டு வர வேண்டும். நெல் குவிண்டாலுக்கு 7 ரூபாய் மட்டுமே தமிழக அரசு உயர்த்தி உள்ளது. 500 ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும். கொள்ளிடம் ஆற்றில் 10 தடுப்பு அணைகள் நாங்கள் கேட்டோம். ஆனால் தற்போது 10 மணல் குவாரிகளை உருவாக்கி உள்ளது இந்த அரசு. என்.எல்.சி. கடலூர் மாவட்டத்தின் பிரச்சனை இல்லை. இது தமிழகத்தின் பிரச்சனை. தமிழக அரசு 67 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்ளை என்.எல்.சி கொடுத்து உள்ளது. விளை நிலங்களை அழித்து மின்சாரம் தேவையில்லை. காற்றாலை, நீர் மூலமாக தயாரிக்கலாம். தமிழகத்தின் நான்காவது நெல் உற்பத்தி பகுதியினை தற்போது தமிழக அரசு என்.எல்.சி. நிர்வாகத்தின் மூலம் விளை நிலங்களை அழித்து வருகிறது. தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முழுவதுமாக பாதிக்கப்பட்டு உள்ளது. ஒரு நாடு ஒரு தேர்தல் என்பது குறித்து உள்ள சாத்திய கூறுகளை பார்க்க வேண்டும். வாக்கு எந்திரங்கள் 12 லட்சத்து 50 ஆயிரம் மட்டுமே உள்ளது.

பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல் ஒரே நேர்த்தில் நடத்த தேவையான வாக்குப்பதிவு எந்திரங்கள் இல்லை. இதற்காக அமைக்கப்பட்ட குழு என்ன பரிந்துரை கூறுகிறதோ அதற்கு பிறகு நாங்கள் கருத்து தெரிவிப்போம். விரைவில் கூட்டணி குறித்து எங்களது முடிவை அறிவிப்போம். நீட் தேர்வு என்பது தேவையில்லாத ஒன்று. தமிழகத்திற்கு எதிரானது. கிராமப்புற மாணவர்களுக்கு எதிரானது. தகுதியான மருத்துவரை நீட் தேர்வுஉருவாக்கவில்லை. மருத்துவ படிப்பு என்பது வியாபாரம் ஆக்கப்பட்டு விட்டது. தமிழகத்தில் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். நீட் தேர்வு குறித்து கவர்னர் தனிப்பட்ட கருத்துக்களை திணிக்க கூடாது. கவர்னர் நடுநிலையாக செயல்பட வேண்டும். தமிழகத்தில் இளைஞர்களிடம் மது, சூது, போதை பொருட்கள் அதிகமாக உள்ளது. தமிழகத்தில் போதை பொருட்கள் கட்டுப்பாட்டை மீறி அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் போதை பொருட்கள் ஒழிப்பு பிரிவில் போதுமானகாவலர்கள்இல்லை. தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தருமபுரி சோகத்தூரில் உள்ள பழமை வாய்ந்த ஆஞ்சநேயர் சிலையை இடமாற்றம்



தருமபுரி, செப். 5

தருமபுரி அடுத்த சோகத்தூர் ஏரிக்கரை அருகே தகடூரை ஆண்ட அதியமான் மன்னரால் வீர தீர ஆஞ்சநேயர் கோவில் நிறுவப்பட்டது. இந்த கோவிலை பொது மக்கள் புதுப்பித்து வழிபட்டு வந்தனர். இந்த நிலையில் ஓசூர் முதல் அதியமான் கோட்டை வரை புதிதாக 4 வழி விரைவு சாலை அமைக்கப்படும் பணி நடந்துவருகிறது. கோவில் அருகே அமைக்கப்படும் மேம்பாலத்தால் கோவிலுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து தேசிய நெடுஞ்சாலைதுறையினர் கோயிலை பாதுகாப்பாக அகற்றக்கோரி இந்து சமய அறநிலை துறைக்கு அறிவுறுத்தினர். இதனை அடுத்து நேற்று அறநிலைத்துறையினர் சுமார் 5 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் சிலையை பாதுகாப்பாக கிரேன் மூலம் அகற்றி ஏரிக்கரை அருகே உள்ள சென்ன கேசவா பெருமாள் கோவில் அருகே ஆகம விதிகளின்படிபிரதிஷ்டை செய்யப்பட்டது. விரைவில் இங்கு கோவில் அமைக்க இந்து சமய அறநிலையத் துறையினர் மற்றும் சோகத்தூர் ஊர் பொது மக்கள் முடிவு செய்து உள்ளனர்.

இந்த சிலை மாற்றம் தொடர்பாக இந்து சமய அறநிலைத் துறையினருக்கு சாலை அமைக்கும் ஒப்பந்ததாரர் மூலம் பெருந்தொகை கை மாறி உள்ளதாக தெரிய வந்துள்ளது.

# திண்டுக்கல் கலெக்டர் ஆபீசில் கோவில் நிலத்தை மீட்டு தரக்கோரி ஆர்ப்பாட்டம்



திண்டுக்கல், செப். 5

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் வட்டம் போடிகாமன் வாடியை சேர்ந்த பொது மக்கள் மனு அளிக்க வந்தனர். அவர்கள் தெரிவிக்கையில், எங்கள் ஊரில் பழமையான முத்தாலம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சொந்தமான 2 ஏக்கர் 14 செண்ட் நிலத்தை தனி நபர் ஆக்கிரமித்து பொதுமக்களுக்கு தெரியாமல் வேறு ஒருவருக்கு விற்று விட்டார். இதுகுறித்து மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே கோவிலுக்கு சொந்தமான நிலத்தை மீட்கவலியுறுத்திபோராட்டம் நடத்தி வருகிறோம் என்றனர். இதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில் மனு அளித்து சென்றனர்.

இதேபோல் நாம்தமிழர் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட வக்கீல் அணி சார்பில் மவட்ட செயலாளர் வேல்முருகன் தலைமையில் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது. அந்த மனுவில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேருக்கு கலங்கம் விளைவிக்கும் வகையில் நடிகை விஜயலெட்சுமி மற்றும் வீரலெட்சுமி ஆகியோர் பொய்யான குற்றசாட்டுகளை கூறி சென்னை மாநகர காவல் ஆணையாளரிடம் மனு அளித்துள்ளனர். பணம் பறிக்கும் நோக்கில் செயல்படும் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

முன்னதாக அக்கட்சியினர் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

# இன்ஸ்டாகிராமில் காதல்: பிளஸ்1 மாணவியை ஏமாற்றி நகை பறித்த என்ஜினீயர்

வண்டலூர், செப். 5

மறைமலை நகர் பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி அதே பகுதியில் உள்ள பள்ளியில் பிளஸ்1 படித்து வருகிறார். இவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பகுதியை சேர்ந்த என்ஜினீயரான வேல்முருகன்(22) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் செல்போன் மூலம் பேசி காதலித்து வந்ததாக தெரிகிறது. இருவரும் செல்போனில் பிரீபயர் கேம் விளையாடுவது வழக்கம். இந்த விளையாட்டுக்காக பணம் தேவைப்படுகிறது என்று கூறி மாணவியிடம் வேல்முருகன் அடிக்கடி பணம் பெற்று வந்ததாக கூறப்படுகிறது. மாணவி பெற்றோருக்கு தெரியாமல் வேல்முருகனுடன் பழகி வந்து உள்ளார். இந்நிலையில் வீட்டில் இருந்த 12 பவுன் நகை மாயமாகி இருப்பதை கண்டு பெற்றோர் சந்தேகம் அடைந்தனர். மகளிடம் விசாரித்த போது அவர், காதலன் வேல்முருகனுக்கு பணம் தேவைப்பட்டதால் நகையை கூரியர் மூலம் அனுப்பி வைத்ததாக தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மகளின் செல்போனை ஆய்வுசெய்தபோதுஅதில் மகளின் ஆபாசமான புகைப்பட ங்கள், வீடியோக்கள் வேல்முருகனுக்கு அனுப்பி இருப்பதை கண்டு அதிர்ந்தனர். இதுகுறித்து மாணவியின் பெற்றோர் கூடுவாஞ்சேரியில் உள்ள அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். இன்ஸ்பெக்டர் ஆனந்ததாண்டவம், சப்இன்ஸ்பெக்டர் மோகன்ராஜ் ஆகியோர் தலைமையிலான தனிப்படை போலீசார்திசையன் விளை சென்று மாணவியை ஏமாற்றி நகைபணம் பறித்த வேல்முருகனை கைது செய்தனர். அவர் இதுபோல் வேறு பெண்களை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்டு உள்ளாரா? என்று அவரது செல்போனை கைப்பற்றி மேலும் விசாரித்து வருகிறார்கள்.

# ரிஷிவந்தியம் பகுதியில் வளர்ச்சி திட்ட பணிகளை தோட்டக்கலை துணை இயக்குனர் ஆய்வு



கள்ளக்குறிச்சி, செப். 5

ரிஷிவந்தியம் வட்டாரத்தில் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை நேரடியாக விவசாயிகளின் வயலில் தோட்டக்கலை துணை இயக்குனர்சு.சசிகலா ஆய்வு செய்து தோட்டக்கலை புதிய தொழில்நுட்பம் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் பாசர், மரூர், முட்டியம் கிராமத்தில் தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு, சீர்பாத நல்லூர் கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறையின் மூலம் மானியம் வழங்கப்பட்டு தற்போது உற்பத்தி செய்து வரும் காளான் வளர்ப்பு குடில், கடுவனூர் கிராமத்தில் புதிய பரப்பு விரிவாக்கம், பழப்பயிர் இனத்தின் கீழ் பாக்கு நடவு செடிகளுக்கு இடையில் ஊடுபயிராக பப்பாளி, வாழை நடவு தோட்டத்தினையும், உயர்ரக தோட்டக்கலை தொழில் நுட்ப சாகுபடி இனத்தின் கீழ் துறையின் மூலம் பிளாஸ்டிக் நிலப் போர்வை மற்றும் சொட்டுநீர் பாசன முறையில் தர்பூசணி, முலாம்பழம் நடவு செய்துள்ள விவசாயிகளின் வயல் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து கூடலூர், மரூர், சீர்பாதநல்லூர் ஆகிய கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள தரிசு நில தொகுப்பில் தமிழக அரசின் மூலம் திறந்த வெளி கிணறு அமைக்கும் பணிகளின் தற்போதைய நிலை மற்றும் திட்ட இனத்தின் வாரியாக பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்து தரிசு நில தொகுப்பில் உள்ள விவசாயிகள் மற்றும் அக்கிராம பொறுப்பு அலுவலரிடம் அடுத்த கட்ட பணிகளான தேர்வு செய்யப்பட்டுள்ள தரிசு நில தொகுப்பு செம்மைப்படுத்தும் நோக்கில் விருப்பமுள்ள தகுதியான விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகள் விரும்பும் சொட்டுநீர் பாசன நிறுவனத்தின் மூலம் உரிய ஆவணங்கள் இணையத்தில் பதிவு மற்றும் பணி ஆணை வழங்கி சொட்டுநீர் பாசன வசதிகள் ஏற்படுத்தி கொடுத்து விவசாயிகளுக்கு நீண்ட காலம் வருமானம் தரக்கூடிய மா, கொய்யா, எலுமிச்சை, நெல்லி, பாலா, தேக்கு உள்ளிட்ட ஏனைய பல்லாண்டு பழ பயிர்கள் மற்றும் மர பயிர்களை நடவுப் பணிகள் , பயிர்பராமரிப்பு பாதுகாப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளுமாறு மேலும் தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்ட மானியங்கள் பயன்பெறுமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார். ஆய்வின் போது ரிஷிவந்தியம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் முருகன், வேளாண்மை துணை அலுவலர் சிவனேசன் தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜேஷ், சீனிவாசன், வேலன் வேளாண்மை உதவி அலுவலர்நசுருல்லா, அப்பாஸ் கிராம பொதுமக்கள்உள்ளிட்டவர்கள் உடன் இருந்தனர்.

# கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் கைகளை இழந்து காலினால் மனு எழுதிய மாற்றுத்திறனாளி பெண்

கடலூர், செப். 5

கடலூர் கலெக்டர் அலுவலகத்தில் இன்று மக்கள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் கடலூர் மாவட்டத்தில் இருந்து ஏராளமான பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக மனு அளித் வந்தனர். கடலூர் மாவட்டம் பண்ருட்டி போலீஸ் லைன் தெருவில் வசிப்பவர் தீபா (26). 2 கைகளும் இல்லாத மாற்றுத் திறனாளியான இவர் தனது காலால் மனு எழுதி கலெக்டரிடம் அளித்தார். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: 2 கைகளையும் இழந்த நான் பெட்டிக்கடை வைக்க விரும்புகிறேன். அதனால் எனக்கு பண்ருட்டி லிங்க் ரோட்டில் உள்ள பஸ் நிறுத்தம் அருகில் பெட்டிக்கடை வைக்க இடம் ஒதுக்கி தர வேண்டும். இதன் மூலம் நான் யாருடைய உதவியும் இன்றி எனது பெற்றோரை கவனித்து கொள்ள உதவியாக இருக்கும். எனவே எனக்கு பெட்டிக்கடை வைக்க இடம் ஏற்பாடு செய்து தர வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. காலினால் மனு எழுதிய மாற்றுத் திறனாளி பெண்ணை, அங்கு வந்த பொதுமக்கள் அச்சரியத்துடன் பார்த்தனர்.

# எல்லா நடிகர்களுக்கும் கமல் ஒரு உத்வேகம் ஷாருக்கான்



4 செப்டம்பர் 2023 3:12 PM அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் 'ஜவான்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களை கவர்ந்தது.

தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ தற்போது இயக்கியுள்ள திரைப்படம் 'ஜவான்'. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்துள்ளார். நயன்தாரா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இப்படத்தின்மூலம்பாலிவுட்படஉலகில்அனிருத்இசையமைப்பாளராகஅறிமுகமாகியுள்ளார். பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' திரைப்படம் வருகிற செப்டம்பர் 7ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டிரைலர் வெளியாகி ரசிகர்களை கவர்ந்தது. நடிகர் ஷாருக்கான், ரசிகர்களின் கேள்விக்கு சமூக வலைதளத்தில் பதிலளித்து வந்தார். இதில் நடிகர் கமல்ஹாசன் குறித்து கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு, "கமல் மிகவும் அன்பானவர். எல்லா நடிகர்களுக்கும் அவர் உத்வேகமாக இருக்கிறார்" என்று பதிலளித்தார்.





# நவீன காலத்திற்கு ஏற்றார்போல் மாற வேண்டும் அஸ்வின் குமார்

நடிகர் அஸ்வின் குமார் 'என்ன சொல்ல போகிறாய்' என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். இவர் தற்போது பல படங்களில் கவனம் செலுத்தி வருகிறார்.

'குக் வித் கோமாளி' நிகழ்ச்சி மூலம் பிரபலமான அஸ்வின் குமார் அதன் பின்னர் 'என்ன சொல்ல போகிறாய்' என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார்.

இதைத்தொடர்ந்து இவர் நடித்த 'செம்பி' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இவர் தற்போது பல படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். நடிகர் அஸ்வின் குமார் சென்னையில் புதிதாக மறுவடிவமைப்பு செய்யப்பட்ட இந்தியன் டெரெய்ன் ஷோரூமை திறந்து வைத்துள்ளார். இந்த புதிய ஷோரூம் திறப்பு விழாவில் நடிகர் அஷ்வின் குமாருடன் இணைந்து, இந்தியன் டெரெய்ன் நிர்வாக இயக்குனர் சரத் நரசிம்மன், தலைமை வர்த்தக அதிகாரி ஷெஹ்னாஸ் ஷெரீப் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பேசிய நடிகர் அஷ்வின் குமார், "பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியில் இந்தியன் டெரெய்ன் ஸ்டோரை திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நீண்ட காலமாக இந்த பிராண்டைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர் என்ற முறையில், இந்த ஆடைகளின் தரம், ஸ்டைல், புதுமை ஆகியவை குறித்து எனக்கு நன்கு தெரியும்.



மேலும், இங்கு அனைவரும் விரும்பும் வகையில் நவீன காலத்திற்கு ஏற்ற வகையிலான ஏராளமான ஆடைகள் உள்ளன. இங்கு இந்த புதிய ஷோரூமை திறந்துள்ள இந்நிறுவனத்திற்கும் அதன் நிர்வாகத்திற்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.





# 'தளபதி 68' முதல் பாடல் எப்படி இருக்கும் தெரியுமா..? யுவன் கொடுத்த அப்டேட்

நடிகர் விஜய் தற்போது இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' திரைப்படத்தில் நடித்துள்ளார். திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடந்து விஜய்யின் 68வது படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்குகிறார். கல்பாத்தி எஸ் அகோரம் சார்பில் ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். 'தளபதி 68' என தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தின் பணிகள் தொடக்க நிலையில் உள்ளன. இப்படத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், 3டி விஎஃப்எக்ஸ் (3D VFX) டெக்னாலஜி இப்படத்தில் பயன்படுத்தப்படவுள்ளது. இதற்காக படக்குழு சமீபத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் சென்றிருந்தனர். இந்நிலையில், 'தளபதி 68' படத்தின் அப்டேட் கொடுத்துள்ளார் இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா. அதாவது, சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட யுவன் 'தளபதி 68' படத்தின் முதல் பாடல் தரலோக்கலாக இருக்கும் என்று கூறியுள்ளார். இது விஜய் ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.



# ஓர்கவுட்டான சமந்தா விஜய் தேவரகொண்டா கெமிஸ்ட்ரி.. குஷி அதிகாரப்பூர்வ அறிவிப்பு

சமந்தா விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியான திரைப்படம் 'குஷி'. இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியானது.

இயக்குனர்ஷிவாநிர்வாணாஇயக்கத்தில்உருவான திரைப்படம் 'குஷி'. இந்த திரைப்படத்தில் விஜய் தேவரகொண்டா கதாநாயகனாக நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக சமந்தா நடித்துள்ளார். இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகி கலவையான விமர்சனத்தை பெற்று வருகிறது. குஷி போஸ்டர் இந்நிலையில், 'குஷி' படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'குஷி' திரைப்படம் வெளியான மூன்று நாட்களில் ரூ.70.23 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளது.



# விராட் கோலிக்கு பாராட்டு தெரிவித்த பாகிஸ்தான் ரசிகை

பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த நீங்கள் கோலிக்கு ஆதரவாக இருக்கிறீர்களே என ரசிகையிடம் கேள்வி கேட்டனர். ரசிகையின் ஒரு கன்னத்தில் பாகிஸ்தான் கொடி, மற்றொரு கன்னத்தில் இந்திய தேசிய கொடி வரையப்பட்டிருந்தது.

ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதிய ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இந்நிலையில் இந்திய அணி வீரர் விராட் கோலிக்கு பாகிஸ்தான் ரசிகை ஒருவர் பாராட்டு தெரிவித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. நேற்று முன்தினம் போட்டி ரத்தான நிலையில் ரசிகர்கள் மைதானத்தை விட்டு வெளியே வந்தனர்.

அப்போது இரு நாட்டு ரசிகர்களிடம் பேட்டி எடுத்தனர்.

பாகிஸ்தான் ரசிகை ஒருவர் கூறும் போது, விராட் கோலி என்னுடைய பேவரைட் பிளேயர். நான் அவரதுதீவிரமானரசிகை.அவரைபார்ப்பதற்காகதான் இங்கு வந்தேன். இந்த போட்டியில் அவர் சதம் அடிப்பார் என நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை. இருப்பினும் அவரை பார்த்தது மகிழ்ச்சியே என்றார்.

அப்போது பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த நீங்கள் கோலிக்கு ஆதரவாக இருக்கிறீர்களே என கேள்வி கேட்டனர். அதற்கு அந்த இளம்பெண் தனது கன்னத்தை காட்டினார். அதில் ஒரு கன்னத்தில் பாகிஸ்தான் கொடி, மற்றொரு கன்னத்தில் இந்திய தேசிய கொடி வரையப்பட்டிருந்தது.

அப்போது பாகிஸ்தான் ரசிகர் ஒருவர் தலையை நீட்டி எதிர்ப்பு தெரிவிக்க முயன்ற போது அந்த இளம்பெண்,அங்கிள்நாம்அண்டைநாட்டுகாரர்களை நேசிப்பது ஒன்றும் மோசமான விஷயம் இல்லை என பதிலடி கொடுத்தார். பின்னர் அந்த ரசிகையிடம் கோலி அல்லது பாகிஸ்தான் கேப்டன் பாபர் ஆசம் ஆகியோரில் ஒருவரை தேர்வு செய்ய வேண்டும் என்றால் உங்களின் விருப்பம் யாராக இருக்கும் என்ற கேள்விக்கு அவர் விராட் கோலி என பதில் அளித்தார். அவரது இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் இந்தியா, நேபாளம் அணிகள் மோதல்



ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பல்லகெலேயில் நடக்கும் 'ஏ' பிரிவின் கடைசி லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் இந்தியாவும், நேபாளமும் மோதுகின்றன. சர்வதேச கிரிக்கெட்டில் இவ்விரு அணிகளும் சந்திப்பது இதுவே முதல்முறையாகும். இந்த தொடரில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானுடன் மோதியது. அதில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 66 ரன்னுக்குள் 4 விக்கெட்டுகளை பறிகொடுத்து தத்தளித்தது. பிறகு இஷான் கிஷன் (82 ரன்), ஹார்திக் பாண்ட்யா (87 ரன்) ஆகியோரின் அரைசதத்தால் இந்தியா சரிவில் இருந்து மீண்டு 266 ரன்கள் சேர்த்தது.

அடுத்து பாகிஸ்தான் பேட் செய்வதற்குள் மழை புகுந்து விளையாடியதால் ஆட்டம் கைவிடப்பட்டு இரு அணிக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது. அதே சமயம் நேபாள அணி பாகிஸ்தானுக்கு எதிரான தனது தொடக்க ஆட்டத்தில் வெறும் 104 ரன்னில் சுருண்டு 238 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. அந்த ஆட்டத்தில் ஆரிப் ஷேக் (26 ரன்), சோம்பால் காமி (28 ரன்), குல்சன் ஜா (13 ரன்) தவிர வேறு யாரும் அந்த அணியில் இரட்டை இலக்கத்தை தொடவில்லை. எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும். தோற்கும் அணி வெளியேறும். நேபாளம் குட்டி அணி என்பதால் இந்திய பேட்ஸ்மேன்கள் அதிரடி காட்டி அதிக அளவில் ரன் குவிக்க முயற்சிப்பார்கள். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் சொதப்பிய கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, சுப்மன் கில் கணிசமான ரன் திரட்டுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். இதே போல் இந்திய பவுலர்களும் போட்டுத்தாக்க ஆயத்தமாக உள்ளனர். அதே சமயம் இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தனிப்பட்ட காரணத்துக்காக மும்பை திரும்பியுள்ளதாக அணி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் இன்றைய ஆட்டத்தில் ஆடமாட்டார். சூப்பர்4 சுற்று தொடங்குவதற்கு முன்பாக அணியுடன் இணைவார். நேபாளத்தை பொறுத்தமட்டில் முடிந்த வரை சவால் அளிக்க முயற்சிப்பார்கள். 40 ஓவருக்கு மேலாக தாக்குப்பிடித்து விளையாடினாலே அவர்களுக்கு பெரிய விஷயமாக இருக்கும். இன்றைய ஆட்டத்தையும் மழை அச்சுறுத்துகிறது. பல்லகெலேயில் இன்று மழை பெய்வதற்கு 80 சதவீதம் வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாள் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், பிற்பகலில் மழை பெய்து போக போக அதன் தாக்கம் குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. எனவே 'டாஸ்' போடுவதில் தாமதம் ஏற்படலாம். ஒரு வேளை வருணபகவான் வழிவிடாமல் ஆட்டம் ரத்தாகி இரு அணியும் தலா ஒரு புள்ளியை பகிர்ந்து கொள்ளும் சூழல் உருவானால், ஏற்கனவே ஒரு புள்ளியை பெற்றுள்ள இந்தியா சூப்பர்4 சுற்றுக்குள் நுழையும். போட்டிக்கான இரு அணி வீரர்கள் விவரம் வருமாறு: இந்தியா: ரோகித் சர்மா (கேப்டன்), சுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் அய்யர், இஷான் கிஷன், ஹார்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்குர், குல்தீப் யாதவ், முகமது சிராஜ். முகமது ஷமி அல்லது பிரசித் கிருஷ்ணா. நேபாளம்: குஷல் புர்டெல், ஆசிப் ஷேக், ரோகித் பாடெல் (கேப்டன்), ஆரிப் ஷேக், குஷல் மல்லா, திபேந்திர சிங், குல்சன் ஜா, சோம்பால் காமி, கரண் கே.சி., சந்தீப் லமிச்சன்னே, லலித் ராஜ்பன்ஷி. பிற்பகல் 3 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை ஸ்டார் ஸ்போர்ட்ஸ்1 சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.



# ஆசிய கோப்பை 2023 நேபாளம் அணிக்கு எதிரான போட்டியில் இந்தியா பந்துவீச்சு தேர்வு

நேபாளம் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணியில் முகமது ஷமி இடம்பிடித்துள்ளார். வெற்றி பெற்றாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்திய அணி விளையாடுகிறது.

ஆசிய கோப்பை 2023 போட்டி கடந்த வாரம் துவங்கி நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் இன்றைய போட்டியில் இந்தியா மற்றும் நேபாளம் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்து இருக்கிறது. இன்றைய போட்டியில் ஜஸ்பிரித் பும்ரா களமிறங்காத நிலையில், அவருக்கு மாற்றாக முகமது ஷமி இந்திய அணியில் சேர்க்கப்பட்டு இருக்கிறார். இந்த தொடரின் அடுத்த சுற்றுக்கு முன்னேற இந்திய அணி இந்த போட்டியில் வெற்ற பெற வேண்டிய கட்டாயத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கோப்பைக்கான கிரிக்கெட்: நேபாளத்துக்கு எதிராக பும்ரா ஆடவில்லை



ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) பாகிஸ்தான், இலங்கையில் நடைபெற்று வருகிறது. ஆசிய கோப்பை போட்டியில் 6 நாடுகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளாம் அணிகளும், பி பிரிவில் இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு தகுதிபெறும். தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் 238 ரன் வித்தியாசத்தில் நேபாளத்தை வீழ்த்தியது. 2வது ஆட்டத்தில் இலங்கை 5 விக்கெட் வித்தியாசத்தில் வங்காள தேசத்தை தோற்கடித்தது. இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதிய 3வது லீக் ஆட்டம் மழையால் பாதியில் ரத்து செய்யப்பட்டது. நேற்று நடந்த 4வது போட்டியில் வங்காளதேசம் 89 ரன் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது. 5வது லீக் ஆட்டம் இலங்கையில் உள்ள பல்லேகலே மைதானத்தில் நடக்கிறது. இதில் இந்தியா நேபாளம் அணிகள் மோதுகின்றன. இன்றைய போட்டியும் மழையால் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரரான ஜஸ்பிரீத் பும்ரா நேபாளத்துக்கு எதிரான போட்டியில் ஆடவில்லை. அவருடைய மனைவிக்கு குழந்தை பிறப்பதையொட்டி அவர் நேற்று நாடு திரும்பினார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய அனுமதியுடன் அவர் நாடு திரும்பினார். இந்நிலையில் பும்ராவின் மனைவி சஞ்சனாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இதை அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். சூப்பர் 4 சுற்று தொடங்குவதற்கு முன்பு பும்ரா இந்திய அணியோடு இணைந்து கொள்வார். காயம் காரணமாக பும்ரா கிட்டத்தட்ட 11 மாதங்களுக்கு பிறகு சர்வதேசபோட்டியில்விளையாடினார்.அயர்லாந்துக்குஎதிரான20ஓவர்தொடரில்கேப்டனாகபணியாற்றினார். இதற்கிடையே ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் கொழும்பில் நடைபெற இருக்கும் ஆட்டங்களை வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சூப்பர் 4 சுற்றில் 5 ஆட்டங்கள் மற்றும் இறுதிப் போட்டி அங்கு நடக்கிறது.

கொழும்பில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அங்கு நடைபெற இருக்கும். போட்டிகள் தமுல்லா அல்லது ஹம்பன் டோடாவுக்கு மாற்றப்படலாம் என்று தெரிகிறது. இதுகுறித்து நாளை இறுதி முடிவு செய்யப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.